**DEPOSITION OF WITNESS**

------

**IN THE COURT OF : SUBORDINATE JUDGE'S COURT, SIVAGANGAI**

Original Suit .. ..
H.M.O.P. .. ..
M.C.O.P. .. .. **Case No. OS. 126/2021**

Deposition of witness for Plaintiff **P.W.2.**
Defendant
Court

| | | | |
|---|---|---|---|
| **Name** | : திரு.மாதவன் | **Caste** | : |
| **Father's Name** | : | **Calling** | : |
| **Village** | : | **Religion** | : |
| **Taluk** | : | **Age** | : |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 20.03.2023.**

முதல் விசாரணை :

நான் காளப்பூரில் குடியிருந்து வருகிறேன். பத்திர ஆபிஸ்ல் வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1. நான் எழுதிய பத்திரம். வாதிக்கு, பிரதிவாதி எழுதிக்கொடுத்த கிரைய ஒப்பந்த பத்திரம். பத்திரம் எழுதும் போது வாதியின் மகன் அழகு சுந்தரம், தம்பி ராதாகிருஷணன் ஆகியோர் வந்தார்கள். அவர்கள் இருவரும் அந்த பத்திரங்களில் சாட்சி கையொப்பம் போட்டுள்ளார்கள்.

பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:

25.10.2016ம் தேதி பத்திரம் எழுதப்பட்டுள்ளது. நான் பத்திரம் எழுதும் போது வாதி, பிரதிவாதி மற்றும் மேற்சொன்ன இரண்டு சாட்சிகளும் இருந்தார்கள். சொத்தின் மூலபத்திரத்தை பிரதிவாதி கொடுத்தார். பிரதிவாதி என்னிடம் அடமானப்பத்திரம் எழுத சொன்னார் என்றும், வாதி சொன்னதின் பேரில் கிரைய ஒப்பந்தமாக மாற்றி எழுதினேன் என்று சொன்னால் சரியல்ல. அடமானப்பத்திரம் பதிந்தால் 100க்கு 4 சதவீதம், கிரைய ஒப்பந்தத்திற்கு 100க்கு 1 சதவீத கட்டணம். அடமானம் பத்திரம் பதிந்தால் 4 சதவீத முத்திரை கட்டணம் செலுத்த வேண்டும் என்பதால், வாதி என்னிடம் சொல்லி கிரைய ஒப்பந்தமாக எழுத சொன்னார் என்று சொன்னால் சரியல்ல. சாட்சிகள் இருவரும் பத்திரம் எழுதி முடித்த பிறகு கடைசியாக வந்து

கையெழுத்து மட்டும் அவரிடம் வாங்கினோம் என்று சொன்னால் சரியல்ல. வாதியின் மகன் கையெழுத்து போட்டுவிட்டு அவர் வைத்துள்ள முடிவெட்டும் கடைக்கு சென்றுவிட்டார் என்று சொன்னால் சரியல்ல. பத்திரம் முடிக்கும் வரை உடன் இருந்து படித்து பார்த்து கையெழுத்து போட்டார். சாட்சி வாதியின் மகனை அவசரமாக பதிவு செய்யவேண்டும் என்று படித்து பார்க்கவிடாமல் கையெழுத்து மட்டும் வாங்கிக்கொண்டு பத்திரம் பதிவு செய்தேன் என்று சொன்னால் சரியல்ல.